தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்.

தொகுதி V. } துர்மதி௵ தை௴ } பகுதி 10

விஷமற்ற பாம்பே இல்லை
No Non-Poisonous Snakes.

அமெரிக்காவில் பிரசுரமாகும் ஸையன்டிபிக் அமெரிக்கன்
பத்திரிகையினின்று ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி
ஐயர் B. A., B. L. தொகுத்தெழுதியது.

பாம்பு விஷத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து வருபவர் அனைவரினும் சிறப்புற்றவர்களாகக் கருதத்தகும் டாக்டர் பிசாலிக்ஸும் (Dr. Phisalix) அவரது மனைவியுமாக வெகு காலமாய்ச் செய்து வரும் ஆராய்ச்சிகளின் பயனாய்க்கொண்டதொரு கொள்கையானது யாவராலும் குறிக்கத்தகுவது. அஃது என்னவெனில் விஷமற்ற பாம்பே கிடையாதென்பது.

விஷப் பற்கள் படைத்த கொடிய அரவங்கள் மட்டிலுமல்ல, ஒவ்வொரு பாம்புமே விஷமுள்ளது. பாம்பினம் முழுவதிலும் வாயில் ஊறும் உமிழ் நீரும் உடலெங்கும் ஓடிவரும் உதிரமும் விஷமுள்ளதென்றும், நாம் சாதாரணமாக விஷமற்றதாகக் கருதிவரும் பாம்பானது கடித்தவுடன் அதன் பற்கள் பதிந்த சிறு துவாரங்களில் அதன் உமிழ்நீர் படிந்து கடி

பட்ட ஜந்துவுக்குத் துன்பத்தையோ மரணத்தையோ உண்டாக்குகின்றதென்று அவர்கள் கூறுகின்றனர்.

பக்ஷிகளைக் கொண்டும், எலி முதலிய 'கறுவு' பிராணிகளைக் கொண்டும், சிற்சில வேளைகளில் பல்லிகளைக் கொண்டும், நடத்திய சோதனைகளால் சாதாரணப் பாம்புகளுக்குக் கூட விஷமுண்டென்பது நன்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. விஷமற்றதெனக் கருதப்பட்டு வரும் ஒரு வகைப் பாம்பின் உமிழ்நீர்ப்பையிலிருந்து எடுத்த நீரைக் கொண்டு இச்சோதனைகள் நடத்தப்பட்டன. மேற்கூறிய நீரில் ஒரு கன சென்டிமீடர் (Cubic Centimetre) நீரானது ஒரு தவளையைக் கொல்ல எழுபது நிமிஷமாகிறது; ஒரு சிறு பறவையைக் கொல்ல ஏழுபது, எழுபத்தைந்து நிமிஷமாகிறது; கினீ பன்றியைக் கொல்ல ஒன்றரைமணி நேரமாகிறது. இவ் உமிழ்நீரால் நஞ்சுற்ற பிராணிகளிடத்தில் தோன்றும் குறிகள் யாவெனில் மயக்கம், சுவாசம் விடமுடியாதிருத்தல், சுவாசம் விடுதற்கு இன்றியமையாத உறுப்புக்கள் விறைத்துக் கொள்ளல், தசைகள் விறைத்துக்கொள்ளல் என்பனவாம். இதனின்று நாம் இதுவரை விஷமுள்ளன விஷமல்லன என்று பாம்புகளை வகுத்து வந்தது தவறென்பது தெளிவாகிறது.

இவ்வினங்கள் மட்டிலும் விஷமுள்ளன; மற்றவையாவும் விஷமற்றன என்று கூறுவதற்குச் சிறிதும் இடமில்லை. ஏனெனில் இன்ன ஜந்துக்களில் தான் இன்ன இன்ன வகையான விஷம் இருக்கிறதென்று சொல்லுவது எளிதல்ல.

முதுகெலும்பு படைத்த ஜந்துக்களுள் சற்றுத் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவை அனைத்தும் ஏறக்குறைய விஷமுள்ளனவென்றே சொல்லவேண்டும். மீனினங்களில் பெரும்பான்மையன சிறிது விஷமுள்ளன. நிலநீர்ப்பிராணிகளுள்

அனேகம் வகைகளில் இரண்டு வகை விஷம் காணப்படுகிறது. அவற்றை வழவழப்பான (Mucous) விஷமென்றும் கரகரப்பான (Granulous) விஷமென்றும் கூறலாம். முன் கூறியது உடலெங்கிலும் உண்டாக்கப்படுகிறது. பிந்தியது முதுகிலும் தலையிலும் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மட்டிலும் உண்டாக்கப்படுகிறது. ஒவ்வொரு வகை விஷமும் ஒவ்வொரு வகையான விஷக்குறிகளை உண்டாக்குகின்றது. சில வகை விஷங்களால் பயம் ஏற்படுகிறது; விபரீதத் தோற்றங்கள் தோன்றுகின்றன; வாயினின்று உமிழ் நீர் தாரை தாரையாகக் கொட்டுகிறது; வாந்தி ஏற்படுகிறது; உடலில் வலிப்புக்கள் உண்டாகின்றன. தேரையின் விஷத்தால் மயக்கம் உண்டாகின்றது, உடல் விறைத்துக்கொள்ளுகிறது.

இவ்விஷங்கள் யாவும் இரத்தத்தில் கலந்தால் மட்டிலும் தீங்கு விளைவிக்கின்றனவே யன்றிச் சாதாரணமாய் வாயின் வழி உட்கொள்ளப்பட்டால் தீங்கு விளைப்பதில்லை. சில நீர்ப் பிராணிகளுள் காணப்படும் விஷங்கள் பலவகை வாசனைகள் பொருந்தியவை. அவற்றுள் சில உள்ளிப்பூண்டுபோல் துர்நாற்றமுள்ளவை: சில நல் மணம் பொருந்தியவை. அவற்றின் விஷமானது ஊறும் விஷப்பைகளினின்று இரத்தத்தில் சென்று கலக்கின்றன. அவற்றின் முட்டைகளிலும் கூட விஷம் காணப்படுகிறது. முட்டை வெடித்த பின் வெளிவரும் சிறு குஞ்சுகளில் இவ்விஷம் காணப்படுகிறதில்லை. பிறகு குஞ்சு பெரிதாகி அதன் ஊறல் பைகள் (Glands) வளர்ந்து பெரிதான பின் விஷம் மறுபடியும் அவற்றில் காணப்படுகிறது. அவற்றின் உதிர நீரில் (Serum) இருக்கும் விஷம் அனேகம் சிறு ஜந்துக்களைக் கொல்லக்கூடும். ஆனால் இந்த விஷம் அப்பிராணிகளின் தசையில் துளி கூட இல்லை. அதனால் தான் தவளையின் கால அவ்வளவு ருசியாயும் புஷ்டி

காரமாயும் இருக்கிறது. ஒவ்வொரு ஜந்து உண்டாக்கும் விஷமும் அத்தை ஒன்றும் செய்வதில்லை. இதற்குக் காரணம் என்னவெனில் ஒவ்வொரு பிராணியிலும் இருவகை விஷங்கள் இருப்பதே. அவை ஒன்றுக்கொன்று மாற்றாக இருக்கின்றன.

சில நீர்ப்பிராணிகளின் விஷம் மனிதனது அசுத்த இரத்தக்குழாய்களில் கலந்தால் மட்டிலுமே அவனுக்குத் தீங்கு செய்யும். இது சோதனைச்சாலைகளில் நடைபெறக் கூடியதேயன்றி இயற்கையில் நடைபெறுவதில்லை. பொதுவாக விநோதமான வாழ்க்கை புரியும் இப்பிராணிகள் தீங்கற்றவை, பொல்லாத சிறு ஜந்துக்களை அழித்து வருவதால் அவனுக்குத் துணையுமானவை.

தத்துக்கிளிகள்.
Grasshoppers.

ஸ்ரீமான் M. ஏகாம்பரநாதன் M. A. L. T. எழுதியது

இராமனும் கமலமும் ஒருநாள் தோட்டத்துக்கு அங்குள்ள சிலபூச்சிகளைக் கவனித்து அவற்றின் வாழ்க்கை அமைப்பு முதலானவற்றைப்பற்றித் தெரிந்து கொள்ள சென்றார்கள். இராமன் அங்கேயிருந்த ஒரு குரோடன் செடியின் இலைகளெல்லாம் துண்டுகளாகக் கடிபட்டிருப்பதை பார்த்து "அக்கா, இதை எந்தப்பூச்சி இவ்விதம் கடித்திருக்கலாம் என்றும் இந்தச் செடியில் அந்தப்பூச்சி யிருக்கிறதா வென்றும் பார்ப்போம்" என்று சொல்லி அச்செடியை இருவருமாகத் தேடினார்கள். தன் கையின் கிட்டவே இருந்தபோதிலும் வெகு நேரம் வரையில் தெரிந்து கொள்ளாமல் பிறகு கமலம் "இதோ இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு பூச்சியின் மேல் மெதுவாகக் கையை மூடினாள். உடனே இராமன் அதை மெதுவாக ஓர் கண்ணாடிப் புட்டிக்குள் எடுத்து போட்டுக் கொண்டான். பிறகு இருவருமாக அதைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

இராமன்.—அக்கா! இதன் நிறம் எவ்வளவு பசுமையாக இருக்கிறது? இதனால் இதற்கு என்ன உபயோகம் என்று உங்களுக்குத் தெரியுமா?

கமலம்.—தம்பி! எனக்குத் தெரிய வில்லையே.

இராமன்.—அது செடியில் உங்கள் கையின் கிட்டவே இருந்த போதிலும் உங்களுக்குத் தெரியவில்லையே! ஏன்?

கமலம்.—தம்பி! அதன் நிறமும் செடியின் இலைகளின் நிறமும் ஒரே மாதிரி யிருந்ததனால் என் கண்ணுக்கு எளிதில் புலப்படவில்லை,

இராமன்.—அக்கா! பக்ஷிகள் போன்ற சில பிராணிகள் இப்பூச்சிகளைத் தின்று ஜீவிக்கின்றன. இதன் பசுமையான நிறம் செடிகளின் நிறத்தினின்று வேறு படுத்த முடியாமலி ருந்து அவ்விதமான பகைவர்களுடைய கண்ணுக்கு எளிதில் புலப்படாமல் இது தப்பித்துக்கொள்ள உபயோகப்படுகிறது

கமலம்.—ஆகா: தெரிந்து கொண்டேன் இதற்கு ஆகாரம் என்ன ?

இராமன்.—நீங்களே பாருங்கள்: இந்தச் செடியில் இருக்கும் இலைகளைத்தின்று விட்டது. இப்போது இப்புட்டி



யில் சில இலைகளைப்போட்டு நாம் கவனிப்போம். இந்தப்பூச் சியின் வாயைப்பாருங்கள் ; அது எப்படி அசைத்துக் கொண் டேயிருக்கிறது.

கமலம்.—ஆமாம்: அது வாயை அசைப்பது வேடிக்கை யாகத்தான் இருக்கிறது. வாயின் நடுவில் ஏதாவது அகப்பட் டுக்கொண்டால் துண்டு துண்டாக்கிவிடும் போல்தான் தோன் றுகிறது. இதன் தலையில் இரண்டு நீண்ட உரோமங்கள் இருக்கின்றனவே ; அவை யெவை ?

இராமன்:— அவற்றை மீசை யென்று சொல்லலாம் அவைகளை அசைத்துக்கொண்டே இப்பூச்சி தன் வழியைத் துளாவிச் செல்லும்.

கமலம்.—அதெப்படி? எனக்குத் தெரியவில்லையே.

இராமன்:—நான் காட்டுகிறேன். இப்போது உங்கள் கண்களை என் துணியினால் கட்டி விடுகிறேன். நீங்கள் இங்கிருந்து சிறிது தூரம் போங்கள். போகும்போது உங்கள் கைகள் என்ன செய்கின்றன என்று கவனித்துச் சொல்லுங்கள்.

கமலம்.—(கண்ணை மூடிக்கொண்டு) ஏனப்பா, உனக்கு வேடிக்கையாக இருக்கிறதோ! நான் கைகளை நீட்டிக் கொண்டு வழியில் என்ன இருக்கிறதென்று துளாவிச் செல்லுகிறேன்.

இராமன்.—ஏறக்குறைய அதேமாதிரிதான் இந்தப் பூச்சி தன்வழியைத் துளாவிக் கொண்டு போகிறது. இதன் மீசைகள் ஸ்பர்சக்கருவிகளாகும். இவை போன்ற மீசைகளை நீங்கள் வேறு எந்தப் பூச்சியிலாவது பார்த்திருக்கிறீர்களா?

கமலம்.—ஆகா; சமையல் அறையிலுள்ள கரப்புகளுக்கெல்லாம் இருக்கின்றன. அவைகளும் இவ்விதம்தான் மீசைகளை அசைத்துக் கொண்டு போகின்றன. ஆனால், தம்பி கரப்பு, நத்துக்கிளி முதலானவைகளுக்குக் கண்கள் இல்லையா? என் கண்ணைக் கட்டியதனால் அல்லவா கைகளால் வழியைத் துளாவிக் கொண்டு சென்றேன்.

இராமன்;—இவைகளுக்குக் கண்களும் இருக்கின்றன. இதோ பாருங்கள்! மீசைக்குப் பக்கத்தில் தலையில் இருபக்கங்களிலும் இரண்டு கருப்புப் புள்ளிகள் இருக்கின்றன வல்லவா? அவைகள்தான் இப் பூச்சியின் கண்களாம். இன்னொரு ஆச்சரியம் கேட்டீர்களா? ஒரு பூதக்கண்ணாடி

யைக் கொண்டு இக்கண்களை பரிசோதித்தால் ஒவ்வொரு கண்ணும் பல கண்கள் சேர்ந்திருப்பன வாகத் தெரியும். தத்துக்கிளியின் பார்வை வெகு சூக்ஷ்மமுள்ள தாகும்.

கமலம்:—தத்துக்கிளி தத்திக் குதிப்பதெப்படி ?

இராமன்:—இப்பூச்சியின் கால்களை நன்றாகக் கவனித்து பாருங்கள்.

கமலம்:—இதற்கு மூன்று ஜோடி கால்கள் இருக்கின்றன.

இராமன்:—கால்கள் எல்லாம் ஒரேமாதிரி யிருக் கின்றனவா ?

கமலம்:—இல்லை, பின் ஜோடி கால்கள் பருமனாகவும் நீளமாகவும் இருக்கின்றன.

இராமன்:—நான் மறுபடியும் உங்களை ஒருமாதிரி செய்யச் சொல்லப் போகிறேன்.

கமலம்:—என் கண்ணைக் கட்டி 'வேடிக்கை பண்ணாதே.

இராமன்:—இல்லை ; ஆனால் குதிக்கச் செய்கிறேன். நீங்கள் இங்கிருந்து அந்த இடத்திற்கு ஒரே குதியாகக் குதியுங்கள். குதிக்கும்போது கால்களை எப்படிவைத்துக் கொள்ளுகிறீர்கள் என்று கவனித்துச் சொல்லுங்கள்.

கமலம்:— ஏன் ! என் காலை சற்றுவளைந்தாற்போல் வைத்துக்கொள்ளுகிறேன். தொடையும், கீழ்காலும் மடங்கி யிருக்கின்றன.

இராமன்:— தத்துக்கிளியுடைய பின் கால்களின் அமை ப்பைக் கவனியுங்கள். அது குதிக்கும்போது நீங்கள் உங் கள் கால்களை ஊன்றிகுதித்தது போல அவற்றை ஊன்றிக் குதிக்கும்.

கமலம்:— தத்துக்கிளி எப்போதும் குதிக்கத்தான் செய் யுமோ ? நடக்காதோ ?

இராமன்:—என்ன அக்கா! அந்தக் குச்சியின்மேல் நடப்பதைப் பார்க்கவில்லையா?

கமலம்:—இதற்கு இரக்கைகள் இருக்கின்றனவே, இது பறக்கவும் செய்யுமோ?

இராமன்:—ஆமாம், சிறிது தூரம் பறக்கவும் செய்யும்: இதற்கு இரண்டு ஜோடி இரக்கைகள் இருக்கின்றன. மேல் ஜோடி இரக்கைகள் ஒரு விதமாகவும், உள்ஜோடி இரக்கைகள் ஒரு விதமாகவும் இருக்கின்றன. இதோ நான் கையில் எடுத்துக் காட்டுகிறேன். உள்ஜோடி இரக்கைகள் மெல்லிய ஜவ்வு போல் இருக்கவில்லையா? இவை பறக்கும்போது பிரிந்து கொடுக்கும், இவை தான் பறப்பதற்கு முக்கியமாகப் பிரயோஜனப்படுகின்றன. மேல் ஜோடி இரக்கைகள் உள்ஜோடி இரக்கைகளுக்கு ஓர் மூடிபோல் இருக்கின்றன.

கமலம்:—நம்முடைய வீடுகளில் வரும் கரப்புகளுக்கும் இம்மாதிரியான இரக்கைகள் தான் இருக்கின்றனவோ?

இராமன்.—ஆம்.

கமலம்.—தம்பி! நீ இதன் இரக்கைகளை விரித்தபோது இதன் தேகம் நன்றாகத் தெரிந்தது. இதன் தேகம் நீளமாகவும் அநேக வளையங்கள் போன்ற கட்டுகள் உள்ளனவாகவும் தெரிந்ததே.

இராமன்.—ஆமாம்; கரப்பு, தத்துக்கிளி, முதலானவைகளுக்கு அனேக வளையங்கள் போன்ற பகுப்புகள் தேகத்தில் இருக்கின்றன.

கமலம்.—தம்பி! இது செடியிலுள்ள இலைகளைத் தின்றால் செடிகளுக்குக் கெடுதல் அல்லவா?

இராமன்.—ஆமாம். இது பயிரை அழிக்கும் ஓர் பிராணி. சில வருஷங்களில் கிளிவெட்டினால் பயிருக்குச் சேதம் என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறீர்களல்லவா? அது தத்துக்கிளியைப் போன்ற ஓர் பெரிய பிராணியினால் விளையும் கெடுதல்தான்; அதை வெட்டுக்கிளி என்று சொல்லுவதுண்டு.

கமலம்.—தம்பி இன்றைக்குத் தோட்டத்தில் வந்து இத் தத்துக்கிளியைப்பற்றி அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

The Dragon Fly

குளக்கரை அரக்கன்

தும்பி அல்லது தட்டாரப்பூச்சி.

சென்னைப் பிரசிடென்ஸி கலாசாலையில் உயிர்நூல் ஆசிரியராயிருக்கும் ஸ்ரீமான் R. கோபால ஐயர், M.A. L.T. எழுதியது.

தும்பியை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம் என்றாலும் இதன் விநோத வாழ்க்கையைப் பற்றி சிலரே அறிவார். அப்பூச்சிகள் சாதாரணமாக நீர் தேக்கங்களின் நீர்மட்டத்தின்மேல் வேகமாய் அங்குமிங்கும் பறந்து சஞ்சரிக்கும். இப்பூச்சிகளுக்குத் தலைபருத்து உருண்டையாயும், கண்கள் மிக்க விசாலித்தும், மார்புப்பாகம் திடமாயும், உடல் நீண்டுமிருக்கும். உடலின் நுனியில் ஒரு பிளவு உண்டு. தும்பிகளின் இரண்டு ஜோடி இரக்கைகளும் விசாலமாய்ச் சரிகைபோல் மெல்லியதாயிருக்கும்.

தும்பிகள் சிற்சில வேளைகளில் குளக்கரைகளில் மட்டுமன்று மற்றவிடங்களிலும் நூற்றுக்கணக்காகச் சஞ்சரிப்பதை நான் பலதடவை கண்டதுண்டு. சில வேளைகளில் ஏது காரணம் பற்றியோ பழுத்திருக்கும் ஆல், அரசு முதலிய மரங்களின் இலைகள் நடுவில் வேகமாய்ப்பறந்து திரிவதை நான் பலதடவை பார்த்திருக்கிறேன். இன்னும், சாயந்தர வேளைகளில் உயரப் பறப்பதை விட்டு புல் அடர்ந்த மைதானங்களில் நிலத்தை ஒட்டி வேகமாய்ப் பறப்பதையும் பார்த்திருக்கிறேன். சில புஸ்தகங்களில் தும்பிகள் மேகத்தையும் மழை

யையும் கண்டவுடன் ஓடி ஒளித்துக் கொள்ளும் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு செய்தல் சீமைத் தும்பிகளுக்கு வழக்கமாக யிருக்கலாம். இந்தியத் தும்பிகளுக்கு இவ்வழக்கமில்லை. மழை பெய்யும் பொழுதும், பெய்து ஓய்ந்து வெயிலடிக்கும் காலத்தும் தும்பிகள் கூட்டம் கூட்டமாய் பறந்து செல்வதை நான் பலதடவை கண்டுள்ளேன்.

ஆனல் தும்பிகளுக்குச் சூரியன் பிரகாசிக்கும் பொழுது பறந்து இரைதேடுவதில் மிகப்பிரியம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.



தும்பிப்புழு

பலதும்பிகள் பறந்து செல்வதைக் கவனிப்போமாயில் அவைகள் ஏதோ காரணமின்றி அங்குமிங்கும் திரிவது போல் தோன்றும். பிராணிகள் வீணாகக் காலம் கழிப்பவைகளல்ல. தும்பிகள் பறக்கும்போது இரையின் நிமித்தமே திரிகின்றன. இவைகளுக்குக் கொசுக்களே முக்கியமான இரைகளாகும். கொசுக்கள் மிகவும் சிறியவைகளானதால் சற்று உயரப் பறக்கும்பொழுது நமது கண்களுக்குப் புலப்படா. இவ்விதம் பறக்கும் கொசுக்களை வேட்டை யாடியே தும்பிகள் திரிகின்றன.

தும்பிகளில் பலவிதம் உண்டெனினும் சாதாரணமாய்க் காணப்படும் வர்ணமற்ற பூச்சியைப் பற்றி இங்கு பேசுகிறேன். இத்தும்பியைப் புத்தியில்லாச் சிறு பிள்ளைகள்

பிடித்துச் சிறியக் கற்களைக் கால்களால் தூக்கும்படி செய்வது வழக்கம்; தும்பியின் கழுத்தில் ஒரு மெல்லிய நூலைக்கட்டிப் பறக்கவிடுவதும் வழக்கம்.

தும்பிகள் நீர் தேக்கங்களில்லாத விடங்களில் பல தடவை காணப்பட்டாலும் நீர் நிலைகளினருகே சஞ்சரிப்பது தான் அவைகளுக்கு பிரியம். ஏனென்றால் குளக்கரையில் கொசு, விட்டில் முதலிய உணவுகள் அபரிமிதமாய் கிடைக்கும். தவிரவும் தும்பிகள் தமது முட்டைகளை ஜலத்தில் வளரும் செடி, கோரை முதலியவைகளின்மேல் வைப்பது வழக்கம். இக்காரணம் பற்றியே தும்பிகள் குளக்கரைகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

தும்பிகள் நீர்மட்டத்திற்குமேல்பறந்து செல்வதை உற்று நோக்குவோமாயின் இடைஇடையே அவை மீன்கொத்திகள்போல் நீரில் பாய்ந்து மறுபடியும் பறப்பதைக் காணலாம். இவ்விதம் செய்வது ஜலத்தில் உட்காரும் கொசுக்களையும் ஜலம் கெட்டிருந்தால் அதில் வாழும் கொசுப்புழுக்களையும் பிடிப்பதற்கே. தும்பிகள் மிகவும் சாமர்த்தியமுள்ள வேட்டைக்காரர்கள். அதிவேகமாய் பறந்துசென்று தமது பெரிய தாடைகளினால் அப் பூச்சிகளை பிடித்து உண்டும், பசியில்லாமலிருக்கும் காலத்தும் சிறு பூச்சிகளைக் கொன்றும், ஜலத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் கொசுக்களைத் தமது பெரிய கண்களால் பார்த்து அவைகளை வதைத்தும தொந்திரவு செய்வதினாலும், குளக்கரையில் சதா திரிவதாலும இவைகளுக்கு குளக்கரை அரக்கன் என்று பெயரிடலாயிற்று.

தும்பிகள் ஆகாயத்தில் பறக்கும் பிராணியாயிருந்தாலும், இளமைப் பருவத்தில் விகாரமான புழு உருவத்துடன் குளத்தினடியில் சேற்றில் வசிக்கும். இப் பருவத்தில மெதுவாக ஊர்ந்து செல்லும் அழுக்கு நிறமுடையது.

நீர்க்கொடிகளின் பேரில் ஒட்டிக் கொண்டு வெகு நேரம் இறந்தது போல் அசைவற்றுக் கிடக்கும். தலை சற்று தட்டையா யிருக்கும்; உடல் நீளமாயிருக்கும். வாயின் கீழ் உதடு மிகவும் விநோதமானது. ஒருகைபோல் நீளமானது. நுனியில் விரல்களுக்கு பதில் ஒரு இடுக்கி போன்ற கையொன்று உண்டு. இக்கையை நீட்டவும் மடக்கவும் கூடும். சும்மாவிருக்கும்போது இக்கையை உள்ளிழுத்து வெளிக்குத் தெரியாமல் வைத்துக்கொள்ளும். உணவுக்குத் தகுந்த பிராணி கிட்டுமாயின் சடேலென்று கையை நீட்டி அதன் நுனியிலிருக்கும் இடுக்கியால் பிராணியைப் பிடித்துத் தனது தாடையினிடையே கொண்டுசேர்க்கும்.

இக்கொடிய தும்பிப் புழுவின் நிறம் மக்கலா யிருப்பதாலும், தேகத்தைப் பெரும்பாலும் சேற்றுள் அழுத்தி மறைத்து வைத்துக் கொள்வதாலும், பிராணிகளைப் பிடிக்கும்போது அதிவேகமாய்க் கையை நீட்டிப் பிடிப்பதாலும் தினந்தோறும் பல ஜந்துக்கள் இப் புழுவுக்கு இரையாகும்.

இவ்விதம் நன்றாய்த் தினறு பல தடவை தோலுரித்துப் பருக்கும் காலத்தில் முதுகினின்று இரக்கைகள் தோன்றும். புழுப்பருவம் முடிந்தவுடன் ஒரு செடியைப் பற்றிக்கொண்டு நீர் மட்டத்திறகு மேல் வரும். மறுபடியும் ஒருதடவை முதுகின் தோல் நடுவில் பிளக்க உள்ளிருந்து தும்பி இரக்கைகளோடு வெளிவந்து சற்று களைப்பாறி, இரக்கைகளை உலர்த்தித் திடீரென்று கிளம்பிப் பறந்து செல்லும்.

தும்பிகளில ஆண் பெண் என்ற வித்தியாச முண்டு. புணர்ச்சிகாலத்தில் ஆண்தும்பி பெண் தும்பியின் கழுத்தைத் தன் உடலின் நுனியிலிருக்கும கவை போன்ற பிளப்பினுல பிடித்துத் தன் பினனோடு பெண் தும்பியை இழுத்துச் செல்லும்.

பெண்டாட்டியை நம்பாத பேயன்
The Jealous Fool

ஸ்ரீமான் V. P. சுப்பிரமணிய முதலியார் G. B. V. C.
எழுதியது

இந்த ஒரு சிறு கற்பித கதை: "எவ்வரிமான்ஸ்ரிவியூ" என்னும் ஆங்கில மாதாந்தரப் பத்திரிகையின் 1921-ம் வருஷத்து அக்டோபர் மாதச் சஞ்சிகையில் 473-75 ம் பக்கங்களில் வெளிப்பட்டது. விரிவஞ்சி மூலத்தில் உள்ள சில பாகங்கள் மொழிபெயர்க்கப்படவில்லை; தெளிவு கருதிச் சில பாகங்கள் மாற்றப்பட்டும், சில பாகங்கள் நூதனமாகச் சேர்க்கப்பட்டுமிருக்கின்றன.—V. P. சுப்பிரமணிய முதலியார்.

கதை

இராமன், தன் சிநேகிதன் சங்கரனை நோக்கி, "என் நற்றோழ, நான் உன்னிடம் ஒரு மன்னிப்புக்கேட்க வந்திருக்கிறேன். நேற்று இராத்திரி என் மனைவியினிடம் காணப்பட்ட அசாதாரண நடையை நீ கவனியாதிருக்கவில்லையென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. சந்தேகமிருப்பதாகப் பாசாங்கு செய்யமாட்டேன்" என்று சொன்னான்.

சங்கரன், "அதைப்பற்றிப் பேசவேண்டாம். பெண் பிள்ளைகளுடைய விபரீத சுபாவம் தெரிந்ததுதானே. உன் மனைவியும் நானும் செய்துகொண்டிருந்த சம்பாஷணை உற்சாககரமாகும் தற்சமயத்திலே விளக்கு அவிந்தது அவளுக்கு வெறுப்பு விளைத்திருக்கவேண்டும்" என்றான்..

இராமன், "நீ ஒன்றுந்தெரியாத கள்ளங்கவடற்ற சுத்தன். அவள் நடக்கைக்கு அது சிறிதும் காரணமன்று. உண்மைக்காரணம் வேறு. அதைச் சொல்லுகிறேன் கேள். நான் என் வீட்டு மேடைத்தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டிருந்த போது, நீயும் என் மனைவியும் அந்த மேடை அறை ஒன்றில் மிகச் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. அப்போது விளக்கு அவிந்தது. உடனே மிகவும் புத்தியீன மான செய்கை யொன்றைச்செய்து விட்டேன். அதன் பயனை நான் அப்போது சிறிதும் உணரவில்லை. திடீரென எனக்குக் காதல் உண்டாக, நீங்கள் இருந்த அறைக்குள்ளே அரவமில்லாமல் நுழைந்து என் மனைவியை முத்தமிட்டுவிட்டுச் சத்த முண்டாக்காமல் விரைவாய் வெளியே வந்து அவிந்த மின் சாரவிளக்குத் திரும்பப் பிரகாசிப்பதற்காக மின் சாரம் உண்டாக்கும் பெட்டியைச் சரிப்படுத்தினேன்; நான் செய்த செய்கை மூடச்செய்கை யென்பதிற் சந்தேகமேயில்லை. ஏனென்றால், நீ அந்தச் சமயம் உண்டாகிய இருட்டையும் உனக்கும் என் மனைவிக்கும் நெடுங்காலமாக உள்ள சிநேக பலத்தையும் துணையாகக்கொண்டு அவளை முத்தமிடத் துணிந் தாயென்று அவள் கருதி மிகவும் வருத்தமடைந்தாள். அதனாலே தான் உனக்கும் எனக்கும் மனக்கலக்கமுண்டாகும் படி உன்முன் அவள் முகமாறவைத்து வெறுப்பும் கோபமும் வெளிப்படக்காட்டிய தென்பதைத் தெரிந்து கொள்வாயாக. நீ போன பின்பு, நான் உண்மையைச் சொன்னபோது அவள் தன் மனத்துள்ளே தோன்றியதெல்லாங் கூறி, என்னைக் கடிந்தாள். இப்போது தன் அறியாமையை மிகவும் நொந்து எவ்வாறு உன் முகத்தில் விழிக்கக் கூடுமென்று பலவாறாகக் கிலேசிக்கின்றாள். குற்றம் முழுதும் என்னுடையதே. நீ பிர மசாரியாதலால், உனக்குச் சமுசாரசாகரத்திலுள்ள துன்பங்க

னொன்றுந் தெரியாது. காதலருள் உண்டாகும் பிணக்குக் களை நீ அறியமாட்டாய். அறிந்தாலும் அளவிடமாட்டாய் நான் உன்னிடம் முழு உண்மையையும் சொல்லிவிடுவதாக அவளுக்கு வாக்குத் தத்தஞ்செய்து வந்திருக்கிறேன். அவள் நீ சொல்வதைத் தெரிந்து வரும்படி என்னை அனுப்பியிருக் கிறாள். அவளுக்கு யாது சொல்லச் சொல்கிறாய் சொல்'' என்றான்.

சங்கரன், உடனே விடைகூறாமல், சிறிது நேரம் ஆலோ சனையில் ஆழ்ந்திருந்து பின்பு ''நீ பெண்டாட்டியை நம்பாத பேயன் என்று நான் சொன்னேனென்று அவளிடம் சொல. அவள் என் மனத்தில் வருத்தமில்லையென்பதைத் தெரிந்து கொள்வாள்'' என்றான்.

* * * *

கதையை இடையே நிறுத்தியதைக் காட்டும் இவ்வடை யாளங்களிடுதற்கு இரண்டு கணமுஞ் செல்லவில்லையென் றாலும், மேற்கூறிய சம்பாஷணை நிகழ்ந்து ஏழு வருஷங் களாய் விட்டன. இந்த ஏழு வருஷங்களுக்கு முன் பிரமசாரி யாயிருந்த சங்கரன் கிருகஸ்தனாகி மூன்று வருஷங்களாய் விட்டன. இவன் தன்வீட்டிலே ஓர் அறையிலே நன்றாக மெத்தையிடப்பெற்ற ஒரு நாற்காலியிலே, நாடியைக் கையில் ஊன்றி, அன்றைச் சமாசாரப்பத்திரிகை மடியிலே வாசிக்கப் படாமல் வாளாகிடக்க, கண்கள் ஒரு பொருளையும் குறியா மல் வெறு வெளியை நோக்கிய வண்ணமாயிருந்தான். முடி வில்லாத ஆலோசனையும் நீங்காத சந்தேகமும் அவன் மனத் தைக் கலக்கி வருந்தச் செய்து கொண்டிருந்தன. கல்யாண மாகி மூன்று வருஷம் முடிவாயும், தன் மனையாளின் அகாத இருதயத்திலே, எந்த ஒதுக்கிடத்திலே தனக்கு அவள்

இடங் கொடுத்திருக்கிறா னென்று அவன் தெரிந்து கொள்ள முடியாதவனா யிருந்தான். அவனுக்கு அவள் நடை உடை பாவனைகள் ஒன்றோடொன்று மாறு பட்டவைகளாகத் தோன்றின. அவள் ஒரு சமயம் உத்தம இந்திய மாதரது நல்வி லக்கணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற மாதர்சிகா மணியாகவும், மற்றொரு சமயம் மேற்றிசை நாகரிகமும் கீழ்த்திசை நாகரிகமும் விரவி ஒருருவெடுத்தாற் போன்று இரண்டுங்கெட்ட இயற்கைக்கு மாறான செயற்கைப் பாவை யாகவும் தோன்றினாள். அவள் வசீகரமும் உற்சாககரமும் உடையவளாய்ப் பெண் பாலாருட் பெரும்பாலார்போல இன்ன சமயத்தில் இன்னது செய்வாளென்று நிச்சயிக்கக்கூடாத தன்மையாளாயிருந்தாள். இப்படிப்பட்டவள் ஆயுளளவும் சுகதுக்கங்களையும் லாப நஷ்டங்களையும் பகுத்தனுபவித்தற்குரிய வாழ்க்கைத் துணையாகவும் தன் நண்பருள் ஒருவன் அடுத்தடுத்துத் தன் வீட்டுக்குவந்து அவளோடு அளவளாவுவோனாகவும் இருந்ததனால்,அவர்களிருவருடைய சிநேகம் அளவுகடந்ததாய்விட்டதோ என்ற சந்தேகம் ஜனிக்க,அவன் முகத்திலே கவலைக் குறிகள் தோன்றி, நாளாக நாளாக அதிகப் படுவன வாயின. அவனுக்கு அவன் சிநேகிதனை யாவது மனைவியை யாவது சந்தேகிப்பது தகாததாகத் தோன்றியது. ஆயினும் அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் சந்தித்துச் சம்பாஷிக்கையில், அவள் அடையும் சந்தோஷத்தின் அளவு அவள் தன்னுடன் இருக்கும் காலத்தில் அடையும் சந்தோஷத்துக் கதிகமாக இருப்பதாகத் தோன்றியதனால், அவனுக்கு மன எரிவு உண்டாகியது. அவன் தன் மனத்துள்ளே தன்னைப் 'பெண்டாட்டியை நம்பாத பேயன்' என்று சொல்லிக் கொண்டு ·தன் மனச் சந்தேகத்தை மாற்ற முயன்றான். ஆயினும் அது மாறாததாய் அவன் மனத்தை வருத்தத

ஜொழியவில்லை. அவன் இவ்வாறு வருந்திக் கொண்டிருந்த காலத்திலே ஒரு நாள் தனது மற்றொரு சிநேகிதனாகிய இராமன் வீட்டில் இரவில் விளக்கு அவிந்தபோது நிகழ்ந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. வரவே, தான் இப்போதுள்ள நிலையிலே அவன் அப்போதிருந்தா னென்றும் அந்தச் சிநேகிதன் தன்னை அவன் மனைவியின் சோரபுருஷ னென்று சந்தேகித்தா னென்றும், விளக்கு அவிந்ததும், இருட்டு முத்தமிட்டதும் அவன் சந்தேகம் தீரச் செய்த தந்திரமே யென்றும், தான் அப்போது நகைத்து அவனைப் 'பெண்டாட்டியை நம்பாத பேயன்' என்று தான் கூறியதை இப்போது ஞாபகப் படுத்தினான். அந்தச சிநேகிதன், தன் சந்தேகம் அநியாயமான தென்று கண்டு தன் மனைவியும் நண்பனும உண்மையானவரென்று தெரிந்து கொண்டபோது, அவனுக்குண்டாகிய சந்தோஷத்துக் களவுண்டோ என்று சிந்தித்துத் தானேன் அதே தந்திரத்தைச் செய்து தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாதென்று எண்ணினான். தான் நினைத்தபடியே செய்யும சாமர்த்தியம் தனக்கிருந்தால் நன்றே யென்றும் அதனைச் சித்திபெறச் செய்யும் முறை இதுவே யென்றும், அதனை அம்முறையே செய்து தீர்ப்பேனென்றும் தன் மனத்தே உறுதி செய்து கொண்டான். அவ்வாறு உறுதி செய்த வுடனே தன் கவலையை உதறித் தள்ளி விட்டுத் தன் மடிமேலே கிடந்த பத்திரிகையை முழுக் கவனத்துடன் வாசிப்பானுயினான்.

பின்பு வழக்கப்படி தன் வேலைகளைச்செய்து, தனக்கு இயல்பாக இல்லாத மகிழ்ச்சியிருப்பதாகத் தோன்றும்படி நடித்து வந்தான். அவன் மனைவிபால் நடந்து கொண்ட மாதிரி அவளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்க,'ஏது! இது

நா ... [illegible]

றதே! யென்று அவனை வினவினாள். அவன் சிநேகனும் தன்னை அகப்படுத்தற்கு வலையிடப்படுகிறதென்று தெரியாதவனாய்த் தினந்தோறும் வருதலொழியாதவனாய், சங்கரன் முகத்தே காணப்பட்டுக்கொண்டிருந்த கடும் பார்வை நீங்கிவிடுமோ வென்று தான் கொண்டிருந்த பயம் நீங்கிச் சந்தோஷமடைந்தான். இவ்வாறாக நான்கு நாள்கள் சென்றன.

ஐந்தாம் நாள் விசேஷதினமாக முடிவதாக விருந்தது. அன்று சங்கரன் அந்தச் சிநேகிதனை இரவில் விருந்துக் கழைத்தான். சங்கரன் எதிர் பார்த்தபடியே எல்லாம் நிகழ்ந்தன. அவன் மனைவி அன்று விசேஷ குதூகல முடையவளாயிருந்தாள். விருந்தினனாகிய நண்பன் தமிழ்க் கவிநயங்களைப்பற்றி மிகவியந்து பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தான். தன் மனைவியும் நண்பனும் இவ்வாறிருப்பதைநோக்கி, அவன் தான் நினைத்தபடி செய்யச் சமயம் வாய்த்ததாக நினைந்து களித்தான். அவன் அந்தத் தினம் தன்னை ஆக்குந்தினம் அல்லது அழிக்குந்தினம் என்று கருதினான். அவன் நடிக்கக் கருதிய நாடகத்துக்கேற்ற சமயம வாய்ந்ததென்று சந்தோஷித்தான். அவன் மனைவியும் நண்பனும் ஒரு சிறந்த கவியின் பொருளைக்குறித்து விவாதஞ்செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சங்கரன், தான் அவளை விட்டுப்போவதற்கு ஏதுவாக அவளுக்கு வெறுப்புண்டாக்க வேண்டுமென்று கருதி, அசப்பியமாகப் பரிகாசம் பண்ண, அவள் அவனைக் கண்டிக்க, அவளை விட்டு விட்டுப்போனான். போனவன் தாழ்வாரச் சுவரிலிருந்த மின்சாரத் தூண்டுகோலருகே அவர்கள் அறியாமல் நின்று தான் குறித்தது செய்தற்கேற்ற சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். உன் நாயகனுக்குக் கவிருசி தெரியாதென்று விருந்தினன் கூற, அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள். அதுவே சமயமெனறுகொண்டு

மின்சாரத் தூண்டு கோலை * மின்சார விளக்குக்கள் அவியுமாறு இயக்கினன். உடனே அவைகள் அவிய, வீடுமுழுதும் இருள் மூடிக்கொண்டது. அப்போது அவன் "இந்த மின்சார விளக்குக்கள் பாழ்த்த விளக்குக்கள், நான் கீழே போய் அவைகள் சரியாகப் பிரகாசிக்கும்படி செய்ய மின்சாரப்பெட்டியைச் சீர்திருத்துவேன்'' என்று அவர்கள் கேட்கும்படி உரக்கச் சொன்னன். அவ்வாறு போகவில்லை. போகக் கருதவுமில்லை. சிறிது நேரஞ்சென்ற பின் அரவமில்லாமல் மெல்ல அவர்களிருந்த அறையுள் நுழைந்து தன சிநேகனிருந்த திசையிலிருந்து தன் மனைவி இருந்த திசை நோக்கிச் சென்று அவள் தோள்மேற் கைவைத்தான். அவள் திடுக்கிட்டு நடுக்குற்றாள். அவள் முகத்தில் அழுந்த முத்தமிட்டான். அவள் பின்னிடவில்லை.

திரும்ப நன்றாக மாறி முத்தமிட்டாள். அவ்வாறு அவள் மறுமுத்தம் கொடுத்தது அவனுக்கு இடிவிழுந்தாற் போலிருந்தது. சத்தமிடாமல் வெளியேறி, யாரொருவரு குறித்த நோக்குமின்றிக் கீழேபோய் மின்சாரப் பெட்டியிருந்த அறையுட் சென்றான்.

அவர்கள் இருவரும் மின்சாரத் தூண்டுகோலை இயக்கித் திரும்ப மின்சார விளக்குகள் பிரகாசிக்கச் செய்து விட்டு உரத்த உல்லாச சிரிப்போடு அவளிருந்த அறைக்கு வந்து அவனோடு அளவளாவ ஆரம்பித்தவர்கள், அவன் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் பிரமித்து விட்டார்கள்.

அவன் மனைவி, விசனத்தினால் தொண்டை அடைக்க, "என்ன காரணம்'' என்று கேட்டாள்.

"கடுமையான தாக்கு'' என்று முணுமுணுத்துச் சொன்னன்.

---

* மின்சாரத்தூண்டுகோல், இயக்கும் விசைப்பத்தால் மின்சாரவிளக்குகள் பிரகாசிக்கும்படியாகவும் அவியும்படியாகவும் செய்யுங்கருவி.

"நீ இருட்டிலே மின்சாரப் பெட்டியிற் கையிட்டிருக்கக் கூடாது. அதில் ஒரு குறைவு மில்லை. மின்சாரத்தூண்டு கோல் தான் வசமாறியிருந்தது" என்று சிநேகிதன் கூறினன். சங்கரனுடைய திடீரென உண்டாகிய பலவீன நிலைமைக்குக் காரணம் மின்சாரத் தாக்கன்று, மனவேதனைத் தாக்கென்று அவர்கள் தெரிந்து கொள்ள ஏது வில்லை யென்பது கூறவே ண்டியதில்லை.

அவர்கள் அவனை அவன் படுக்கையிற் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். சிநேகிதன் சில ஆறுதல் வார்த்தைகள் சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குப் போனன்.

மனைவி அவனுக்கு இதமாகப் பரிந்து செய்யும் உபசார மெல்லாம் அவன் மனமெரியச் செய்தன. அவளைத்தன் முன் நிற்கக் கூடாதென்று கண்டிதமாகக்கூறி வெளியே போகச் செய்து விட்டான். தூக்கம் வரவில்லை. படுக்கையிற் புரண்டு கொண்டு கிடந்தான். அன்னியனுடன் தனியே இருட்டில் இருப்பதே! அவன் முத்தங் கொடுக்கத் தானும் முத்துவதே! இத்தனையும் செய்து விட்டு ஒன்றும் நடவாதது போல் உலாவித்திரிவதே! எல்லாம் நன்றாயிருக்கின்றனவே! அவளெங்கே! இவளெங்கே! அவளுக்கும் இவளுக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறது! என்று எண்ணினன். மறுநாள் உதய மானது. அதனுல் அவன் மனவேதனையிருள் சிறிதும் நீங்க வில்லை.

அமைதியற்றுச் சித்தப் பிரமை கொண்டு ஒரு வாரம் படுக்கையிலே கிடந்தான். அவனைச் சிநேகிதரும், வைத்திய ரும், உறவினரும் அடுத்தடுத்து வந்து பார்த்த வண்ணமா யிருந்தார்கள். அவன் நிலைமைகாரணமாக, அவன் மனைவிக் குண்டாயிருந்த விசனத்தை மாற்றும்படி அவர்கள் அவளுக் குச் சொல்லிய அநுதாப வார்த்தைகள் அவன் மனத்துள் தீ

அடங்காத கோபத்தை மூட்டின. தன்னிடத்து வந்த வர்களை யெல்லாம் குறிப்பற்ற கொரே நோக்கோடு நோக்கி னன். அவன் மனைவி தனக்கு ஆகாரங் கொடுத்தல் முதலிய ஒன்றுஞ் செய்ய இடங் கொடுக்கவில்லை. இப்போது அவனு டைய ஒரே நோக்கம் உயிரை யொழித்துக் கொள்வதாயி ருந்தது.

"அவர்கள் வாழ்க! ஆநந்தமாக வாழ்க! நான் அவர்க ளுக்கு இடையூறுயிரா தொழிவேனாக!" என்று எண்ணி னன். எட்டாநாளிராத்திரி வயித்தியர் நெடுநேரம் அவன் தேகநிலைமையைச் சோதித்துப் பார்த்து விட்டு அவன் தேக த்துள்ளே தோலின் கீழ்ச் செலுத்துவதற்கு ஒரு மருந்து நீரைச் சித்தஞ் செய்யலானார்.

அவன் "அது என்னது" என்று கேட்டான்.

"அது தூக்கமருந்து. நீ படுக்கையை விட்டு நீங்கவேண்டு மானல், நன்றாகத் தூங்கவேண்டும். இரவும் பகலும் அமை தியற்றிருக்கிறு யென்று போஷகி (நர்ஸ்) சொல்லுகிறாள். நான் இப்போது சிறிது மருந்து செலுத்துகிறேன். நடு இரா த்திரிவரை நித்திரை வரவில்லையானல், அவளை மற்றொரு முறை மருந்து செலுத்தச் சொல்லு. நீ நன்றாகத் தூங்கு வது நிச்சயம்" என்று அவர் கூறினார்.

என்றும் விழியாதபடி அந்த மருந்தை அதிகமாகப் பெறக் கூடுமானல், நன்றயிருக்குமே. திருடியாயினும் நான் அதை அடைவேனென்று தன் மனத்துள்ளே நினைத் தான்.

வயித்தியர் அவன் கைத்தோற்குள் மருந்தைச் செலுத் தினர். பின்பு செய்யவேண்டியதைப் பற்றி போஷகிக்குத் தாழ்ந்த குரலிற் கூறிவிட்டு அவனை நோக்கி "மிக்க அமைதி

யும் தூக்கமும் உனக்கு அவசியம். எவ்வகைக் கிளர்ச்சியும் கூடாது" என்று கண்டிதமாகச் சொல்லிப் புறப்பட்டார். தன் அறைக்கு வெளியே முணுமுணுப்பாகப் பேசும் பேச்சு அவன் கேட்கக் கூடியதாயிருந்தது. அவன் கூர்ந்து கேட்கவே, "ஒரு கிளர்ச்சியும் கூடாது. கூடவே கூடாது" என்று வயித்தியர் அவன் மனைவிக்குக் கூறியது அவனுக்குக் கேட்டது. இது யாருக்குச் சொல்லப்பட்டதென்று ஆலோசித்தான். அப்போது "போஷகி! போஷகி!" என்று வயித்தியர் விளிக்கும் சத்தம் அவனுக்குக் கேட்டது. அவள் உடனே அவன் அறையைவிட்டு வயித்தியரிடம் போனாள். அவன் மருந்தின் குணத்தை உணரலானான். வழுநாளாக இடைவிடாத மனவேதனையால் மிகுந்த களைப்பாயிருந்தான். அக் களைப்பினாலும் மருந்தின் செயலாலும் அவனுக்கு அவனிருந்த அறை பறப்பது போலத் தோன்றியது. அந்தச் சமயத்தில் அந்த அறைக் கதவு திறக்கப்படுவது மங்கலாகத் தெரிந்தது.

அவன் மனைவி வாசலில் நிற்பதைக் கனவிற் காண்பது போலக் கண்டான். அவள், அவன் சௌக்கிய நிலைமையைத் தெரிய விரும்பியும், அவன் தன்முன் இல்லாதபடி கடிவதை அஞ்சியும் திகைத்து நின்றாள். அவன் அவளை "வா" என்றழைக்க உன்னினான். உன்னியவாறு கூற நாக்கு எழவில்லை. கையால் வரும்படி சைகை செய்யக் கருதினான். கையும் எழவில்லை. அவள், கதவை அடைத்து விட்டு மெல்ல உள்ளே சென்று, அவன் படுக்கை அருகே சென்று அவன் நெற்றியிற் கை வைத்துப் பார்த்தாள், தன் விஷயத்தில் அவனுடைய மாறுபட்ட நடைக்குக் காரணம் யாதென்று தெரிந்து கொள்ளக் கருதி, அழுகையை அடக்கிக் கொண்டு, தன் கண்ணீர் ததும்பிய கண்களால் அவன் கண்களை உற்று நோக்

கிறாள். நோக்கவே, சற்று முன் வா என்றழைக்க முயன்ற தினும் அதிகமாக முயன்று சிறிது பேசுஞ்சக்தி பெற்று "பெண்களெல்லாம் வஞ்சகிகளே" என்று அவள் கேட்க முணு முணுத்தான். அவன் கூறிய விஷயமும் மாதிரியும் விநோதமா யிருந்ததனால், அவள் கொண்டிருந்த துக்கத்தை மறந்து சிரித்தாள். அது அவன் மனஎரிவைக் கிளரச் செய்ய "அந்த நாய்! அந்த இரவில் உன்னை முத்தியது! வேசையே! நீ சும்மா இருந்தாய்!" என்று மனத்தில் அடங்கிக் கிடந்த கோபம் திடீரெனக் கிளர்ந்து வெடித்தாற்போல வெளிப் படப் பாம்பு சீறுவது போலச் சீறிக் கூறினான்.

அவள் திடுக்கிட்டுத் தன் கணவன் அப்வொடு பேசு கிறானே, பைத்தியங்கொண்டு பேசுகிறானே வென்று சந் தேகித்தாள்.

பின்பு, "நீர் சொல்லியபடி இல்லை. முத்தியது நீரே ஏன் பொய் சொல்கிறீர்?" என்று உரக்கக் கூவி உரைத்தாள்

அவன் "உன்னை முத்தியது நானா? அது எப்படி உனக் குத் தெரியும்?" என்றான்.

அவள், ஆ! இப்போது முழுதும் எனக்குத் தெளி வாகத் தெரிகின்றது! இப்படிச் செய்வீரென்று யார் தாம நினைத்திருப்பார்கள்! இவ்வாறு சூது செய்தீரா! நீர் சில நாளாகச் சவரஞ்செய்து கொள்ளாதிருந்ததனால், உம்முடைய முகத்தில் உரோமம் அடர்ந்திருந்ததும் உம்முடைய நேசன் அன்று தான் சவரஞ் செய்திருந்ததும் உமக்கு ஞாபகமிருக் குமே. நீர் முத்தியபோது ஒரு மயிர்க் கம்பளம் என் முகத் தில் அழுத்தப் பட்டாற்போன்ற உணர்ச்சியை யுற்றேன்" என்று கூறிப் பின்பு, "சீ! எவ்வளவு இழிவான எண்ணங் கொண்டீர்! அதனால் நோயும் பாயும் உற்று வைத்தியமுஞ் செய்யப் பெற்றீரே! இது மிகவும் வெட்கமானதே!" என்றாள்.

அப்போது வயித்தியரிடமிருந்து திரும்பிய போஷகி அவன் படுத்துக் கிடந்த அறைக் கதவு சார்த்தப் பட்டிருந்ததனால் கதவு திறக்கப்படும் சமயத்தை யெதிர்பார்த்து வெளியே நின்று கொண்டிருந்தாள். கால் மணி நேரமாகியும் கதவு திறக்கப்படாமையால், ஏன் இன்னும் திறக்கப்படவில்லை, காரணம் யாது என்று தெரிய உண்டாகிய அவாவை அடக்க முடியாதவளாய், அறையைத் திறக்கவே, சற்று முன்வரை படுத்துக்கிடந்த, தன் பாது காப்புக்குட் பட்டிருந்த, நோயாளி படுக்கைவிட்டுத் தரைமேல் நின்று தாழ்ந்து மனைவி நாடியைப் பிடித்துத் தாங்கித் தான் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டுவதும், மனைவி அவன் சுகமடைந்தானே யென்ற மகிழ்ச்சியோடு அவன் சூது செய்ததைப்பற்றிய இகழ்ச்சியையும் காட்டும் முகத்தை நாணத்தால் ஒரு புறமாகத் திருப்பிக்கொண்டு நிற்பதும் கண்டு பிரமித்தாள்.

சிவஞான பாடியம்
Siva Jnana Bhashyam

சென்னைச் சட்டகலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் K. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., எழுதியது.

இது, வடமொழியில் வேதாந்த சூத்திரத்திற்குப் பேருரைகளாய நீலகண்டபாடியம், சங்கரபாடியம், இராமாநுஜபாடியம், மத்துவபாடிய முதலியவைகள் போல, தமிழிலே சித்தாந்த சூத்திரமாகிய சிவஞான போதத்திற்குத் திருவாவடுதுறை மாதவச் சிவஞான யோகிகளாலியற்றப் பெற்ற செந்தமிழ் மாண்பேருரையாக விளங்குகின்றது. வடமொழி வியாகரணத்திற்கு, ஆசிரியர் பதஞ்சலியார் இயற்றிய பேருரையை 'மகாபாஷ்யம்' என்று வழங்குவதுபோல சிவஞான பாடியத்தைத் தமிழிலே திராவிட மாபாடியமென்று கூறுவது ஓர் வழக்கு. இந்நூலானது, சைவசித்தாந்த உண்மைகளைச் சிறந்த ஆராய்ச்சி முறையில் விளக்குவதில் ஒப்புயர்வில்லாதது. இந்நூற்பாயிரத்துள், சைவசித்தாந்தத்தின் வேறாய நமது நாட்டுச்சமயங்களை நான்கு பிரிவுள் அடக்கி ஒவ்வொரு பிரிவினையும், ஆறு உட்பிரிவாகப் பகுத்து அவற்றின், கொள்கைகளைச் சுருக்கமாகக் கூறியுள்ளார். பாடியத்துள், கடவுளைப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும், தத்துவங்களைப் பற்றியும் ஆராயுமிடத்துப் பிறசமயக் கொள்கைகட்கும், சித்தாந்தக் கொள்கைக்கும் உள்ள வேறுபாடுகளை ஆசிரியர் மிக நன்றாக விளக்கியுள்ளார். வடமொழி தென்மொழி யென்று இரண்டினு முள்ள சைவநூற் கருத்துக்களி னொருமையை விளக்கிக் காட்டுவதில் ஆசிரியர் திறமையை வியவாதவர் ஒருவருமில்லை. வடமொழியில் வேதம், உபநிடதம், சிவாகமம் என்னும் பிரமாண நூல்களனைத்தும் சைவசித்தாந்தக் கொள்

கைகளையே தமது முடிபாகக் கூறுவனவென்று நமது ஆசிரியர் மிக்க திறமையோடு காட்டுகின்றனர். வடமொழி வேதாந்த சூத்திரம், உபநிடதங்களின் சுருக்கமாகத் திகழ்வதால், அந்நூற்குப் பாடியஞ் செய்யப் புகுவார்க்கு உபநிடதப் பொருளையும், வேதவேதாங்கப் பொருளையும் உணர்தலொன்றே இன்றியமையாதது. ஆனால் சிவஞானபோதமானது, சைவாகம கடலிற் கடைந்தெடுத்த அமிழ்த மாதலினாலும், சைவர்கள் வேதோபநிடதங்கட்குச் சித்தாந்தப் பொருள் கொள்ளுதலினாலும், அச்சித்தாந்த நூற்குப்பொருள் மிக்க பேருரை செய்யப்புகுவோர், வடமொழியில் வேத வேதாந்த, வேதாங்கநூல்களையும் சிவாகமங்களையும் தென்மொழியில், திருவள்ளுவர், சங்கஇலக்கியம், பன்னிருதிருமுறை முதலிய பெருநூல்களையும் செவ்விதின் உணர்தல் இன்றியமையாததாகும். அவ்வாறு இருமொழிப் பெருநூல்களையும் நிலைகண்டுணர்ந்த பேரறிஞர், ஆசிரியர் சிவஞான முனிவரே யாதலின், அவரது அருமைத் தமிழ்மாண் பெருநூலாய சிவஞான பாடியமானது, இருமொழியிலுமுள்ள பாடியப் பெருநூல் யாவற்றினும் சிறந்து விளங்குவதாய்ச் சித்தாந்த சைவர்க்குப் பெறலரும் பெருநிதியாக இலங்காநின்றது. இந்நூல் நெடுங்காலம் திருவாவடுதுறை யாதீனத்தாராற் பாதுகாக்கப்பெற்று வெளிவராதிருந்தது.

இப்போது இந்நூலின் பிற்பகுதியை யாழ்ப்பாணம் வண்ணை நகரத்தில் சுவாமி நாதபண்டிதர் என்னும்புலவர் அச்சிட்டதனினர் கல்வியறி வொழுக்கங்களாற் சிறந்த சிலபேரறிஞர் முயற்சியால் இந்நூல் முழுவதும் அச்சூர்தியேறுவதாயிற்று. இந்நூலானது செந்தமிழன்பர் யாவரும் தமது வாழ்வாகக் கொண்டு போற்றத்தக்கது, இதன் பிரதிகள் சென்னை தங்கசாலைத் தெரு நெ. 300, ஆறுமுகநாவலர் அச்சிபக்கிரசாலையிலும் சிதம்பரம் ஆறுமுக நாவலர்கலாசாலையிலும், கிடைக்கப் பெறும். இதன் விலை ரூ 5.

திருஞான சம்பந்தர் தேவாரம்.

இயற் பொருளழகு.

The Hymns of Tiru Jnana Sambandha.
The Beauty of Nature

சென்னைச் சட்டகலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் K. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L., எழுதியது

இந்த ஞாலமானது முதல்வனது திருவுள்ளக் குறிப்பு வரைந்துள்ள ஒரு பேரேடு போன்றது. அது "செயல் மிகும் மாந்தரின் இயல் மிகும் உலகம்" என இருபெரும் பகுதியை யுடைய பொன்னேடு போல்வது எனவும் கூறுவர். இவ்விரு பகுதிகளும் பலவகைகளில் ஒன்றோடொன்று தொடர்புடையதாகத் திகழ்கின்றன. மக்களது உடம்பே இயற்கை உலகத்தின் பகுதியாக அமைதலின் உடம்பு நிலைபெறுதற்கும் வளருதற்கும் இயற்கைப் பொருள்களின்றுணை யின்றி யமையாததாயிருக்கின்றது. பசி, குளிர், நோய் முதலிய வற்றைத் தோன்றுவிப்பதும் நீக்குவதும் இயற்பொருட்டொடர்பேயாகும். உண்டி ஆடை உறையுள் மருந்து என்னும் இவற்றைச் செம்மையாகத் திறப்பட வகுத்து அமைத்துக் கொள்ளும் பொருட்டு, மக்கள் செய்யு முயற்சி எல்லையற்றதாக விருக்கின்றது. இனி, இஞ்ஞாலத்தின் அளப்பெருந்தன்மையையும் வளப் பெருங்காட்சியையும் கண்டுகண்டு பன்முறையாய்ந்து அவற்றின் அமைப்பினையும் பயனையும் தெரிந்துகொள்வதற்கு எத்தனையோ காலம் முயன்று எண்ணிறந்த அரிய நூல்

களைச் செய்து வைத்தும் இன்னும் தமது அறிவனாலே மக்கள் முடிவு காணவில்லை.

இனி, மக்களது உள்ளத்திற்கு இன்பம் விளைக்கவல்ல இயற்பொருள் அழகினையும் இத்துணைத்தென் மொழியாலும் அறிவாலும் அறுதியிட்டுரைத்தல் அதி அரிதென்பதில் ஐயம் யாதுளது.?

பண்டைநாட்டிலுமுள்ள நன்மாந்தர் தமது உலக வாழ்க்கை திறம் பெற்ற நாடடொடங்கி, பாவலரும், இசைவலரும், ஓவியரும் மக்களது உள்ள உணர்வின்கண் உவகை, அவலம், வியப்பு, மயல் நகை, பெருமுதம், முதலிய எண்சுவையையும் எண்ணிறந்த வகைச் சுவையையும் இனிதாகவிளைவித்து இன்பந்தரும் இயற்கைப் பொருள்களின் வனப்பையும் வளத்தையும் ஆய்ந்தாய்ந்து எழுதியும் பாடியும் இன்னும் அவற்றின் எழிலை இவ்வளவு என்று முடிவுகாணுதிளைத்து நின்றனர். மனிதனது உடம்பிற்கும் அறிவிற்கும் எட்டாததாய் அவனது உயிர் விலாசமாகிய உணர்ச்சியொடு கலந்து இன்பம் பயப்பதாய், எழுத்திலும் பாட்டிலும் அமையாது எங்கும் பொங்கியெழுகின்ற இயற்கை மாதின் பேரழகை என்னென்னுரைப்பது?

இயற்பொருளழகினைச் செயற்கையிற் காட்டும் கலைகள் பலவினும் பாட்டென்பதே இணையற்ற வின்பம் ஈவதாம்; இசைக்கும் இடமாவதாம்; உள்ளச் சுவரில் எழுதிய ஓவியம் அமைப்பதாம்; எவ்விதப்பொருள் நலத்தையும் எண்ணமென்னுங் கண்ணாடியிற் காட்டுவதாம். இத்தகைய பாட்டானது உயிரும் உடம்பும்போல சொல்லும் பொருளும் இயைந்திலங்கப்பெறுவது. பாவலனது உள்ளத்தின் வெளிவடிவமே பாட்டாமாதலின் அவனது உள்ளம் போற்றெளிவும் ஆழமுஞ் சுவையும் உள்ளதீதார் இன்பச்சுனைபாகவே அமைந்திருக்கும்

ஆதலின் கம்பநாட்டடிகள் பம்பைப்பொய்கையை அணிந்துரைக்குமிடத்து அதனைக் கற்பகம்போன்ற பாவலர் உள்ளத்திற்கு உவமித்தார். வண்பாவலர் உள்ளம் பாதாளத்தினும் ஆழம் மிக்கது என்றது பின்வரும் செய்யுளிற்காண்க:—

"எற்பொரு நாகர்தம் பிருக்கை யீதெனக்
கிற்பரோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனைய வக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது"

பாவலரது உணர்வின் மாட்சிக்குத் தக்கவாறே பாட்டின் நயமும் ஆம் ஆதலின் இயற்கை நலனை ஆராயப்புகுங்கால் இயற்கைமாதின் தலைவனை ஞானக்கண்ணாற் கண்டாரது அருட்பனுவல்களை தக்ககருவியாகும் ஆதலின் அவ்வாறருள் பெற்ற பெரியாருட்சிறந்த திருஞான சம்பந்தப்பெருமான் பச்சிளங்குழந்தை பருவததினராய்த் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்திருப்பதிகங்களிற் சிதறுண்டு கிடக்கும் இயற்பொருள் அழகுணர்த்தம் செய்யுட்பகுதியே, இவண் ஆராய எடுத்துக்கொள்ளப்பட்டது.

(தொடரும்)

தமிழ் மொழிகள்

Tamil Terms.

ஸ்ரீமான் பண்டிதர் குருஸ்வாமி தீக்ஷிதரவர்கள்
எழுதியனுப்பியது.

Lecturer	பெருஞ்சொல்லாளன்
Revolution	புரட்சி
Rebellion	பெருங்கலகம்
Insurrection	சிறுகலகம்
Agitation	கிண்டுதல், கிளறுதல்
Superstition	அறிவின்மை
Resurrection	மீட்டுயிர்த்தல்
Cohesion	தற்பொருட்சேர்க்கை
Adhesion	பிறபொருட்சேர்க்கை
Elasticity	நெகிழ்ச்சி
Malleability	தகடுபடல்
Ductility	கம்பியாதல்
Porosity	துளைவு, பொந்துடைமை
Industructibility	அழியாமை
Electron	மிகுநுட்பொருள்
Atom	நுட்பொருள்
Electricity	மின்னிழுப்பு
Magnetism	இரும்பிழுப்பு
Heat	வெப்பம், சூடு
Sound	ஒலி
Vibration	அடிப்பு
Oscillation	ஊசல்
Movement	போக்குவரவு
Motion	பெயர்தல்
Light	ஒளி

(தொடரும்)